**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
**எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.**
**தொலைபேசி எண்: 044–22201337.**
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in
**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண். 69/ந/2025**
நாள்:01.08.2025

திரு.S.அன்பழகன்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவரின் 14.02.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.02.2025 அன்று பெறப்பட்டு 69/ந/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவர் தனது 14.02.2025 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“துறையூர் திருச்சி சாலையில் TMB பேங்க் அமைந்துள்ள அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடம் தரைதளம் தவிர்த்து 3 மாடி கட்டிடம் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் அதுவும் கட்டிடத்தின் மெயின் பகுதி முன்புறம் (அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படி வைத்து கட்டிடத்தை சுற்றியும் இடம் ஏதும் விடாமலும் கட்டியதோடு, அந்த கட்டிடத்தில் தரை தளத்தில் TMB பேங்க், TMB ATM சுமார் 4000 சதுர அடியில் செயல்படுவதோடு, அந்த கட்டிடத்தில் ப்ரோஸ்டைல் துணிக்கடை, ஸ்ரீராம் பைனான்ஸ் இரண்டும் சுமார் 3000 சதுர அடியில் செயல்படுவதோடு, அந்த கட்டிடத்தில் ஸ்ரீ வேலவா இன்ஸ்டிடுடயுசன் நர்சிங் & கேட்டரிங் ஹோட்டல் மேனேஜ்மென்ட் இரண்டும் சுமார் 3000 சதுர அடியில் செயல்பட்டு வருகிறது. தினசரி பேங்கிற்கு நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வருவதோடு ஸ்ரீராம் பைனான்ஸ்க்கு தினசரி நூற்றுக்கு அதிகமானோர் வருவதோடு, ஸ்ரீ வேலவா இன்ஸ்டிடியுசன் சென்டருக்கு நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் வருவதோடு இவை ஒட்டு மொத்த அனைத்திற்கும் வரும் பொதுமக்களின் வாகனம் நிறுத்துவதற்கு என்று 1 அங்குலம் கூட இட வசதி ஏற்படுத்தாமல்

பார்க்கிங் வசதி செய்யப்படாமல் இந்த அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடம் 10 வருடங்களுக்கு மேலாக செயல்படுவதை சுட்டி காட்டி விதிமீறி செயல்படும் அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை பூட்டி சீல் வைத்து தடை செய்யுமாறு துறையூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு 19.12.2024–ல் புகார் அனுப்பி அதனை அவர் 20.12.2024ல் பெற்றுக்கொண்டதாக எனக்கு ஒப்புதல் சான்று வந்துள்ளது. நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குநர் ஆகியோருக்கும் அனுப்பி என் புகாரை பெற்றுக்கொண்டதாக அனைவரிடம் இருந்தும் எனக்கு ஒப்புகை சான்று வந்துள்ளது.

அரசு அதிகாரிகள் சாதாரண பொதுமக்கள் கொடுக்கும் புகார் மனு மீது நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் ஆள்பலம், பணபலம் கொண்டவர்கள் புகார் மீது மட்டும் தான் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றும், இத்தகைய அதிகாரிகளின் அலட்சிய போக்கை நீதிமன்றம் மூன்றாம் நபர் போல் நின்று வேடிக்கை பார்க்காது என்றும் கடுமையாக எச்சரிக்கை விடுத்து தலைமைச்செயலாளர் மூலம் அனைத்து துறைக்கும் சுற்றறிக்கை பிறப்பிக்க மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதை அறிந்தும், ஆணையர் முதல் தலைமைச்செயலர் வரை என் புகார் மீது இதுவரை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் வெட்கித் தலைகுனிய வேண்டிய செயல் என்று சொன்னால் அது மிகையல்ல என்று கருதுகின்றேன்.

நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 19.12.2024–ல் அனுப்பிய புகாரிலேயே 10 வருடங்களுக்கு மேல் விதி மீறி செயல்படும் அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை நகராட்சி ஆணையர்கள் உரிய நேரத்தில் சட்டப்படி ஆய்வு, சோதனை செய்திருந்தால் விதிமீறல்களை தவிர்த்திருக்கலாம் என்றும் கடந்த 10 வருடங்களுக்கு மேல் துறையூர் நகராட்சி ஆணையர் பதவியில் இருந்த அனைவருமே விதிமீறிய கட்டிட உரிமையாளரிடம் ஆதாயம் பெற்றுள்ளார்களோ என்கிற சந்தேகத்தை தெரிவித்து மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் பெற்று எந்த வேலையும் செய்யாமல் வெட்டித்தனமாக காலத்தை கழித்துள்ளார்களா என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கட்டிட விதிமீறல்களை தடுப்பது எப்படி என்று அனுப்பிய அறிவுறுத்தல்களை சுட்டி காட்டியும், விதிமீறல் சம்மந்தமாக மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதிமீறிய கட்டிடம் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் கூறி உள்ள வழிகாட்டுதலை சுட்டிக்காட்டியும் 19.12.2024–ல் அனுப்பிய புகாரிலேயே துறையூர் நகராட்சி ஆணையருக்கு தெள்ள தெளிவாக குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் எனது புகாரிலேயே துறையூர் நகராட்சி ஆணையர் அவர்கள் அவரின் உயர் அதிகாரிகளின் உத்தரவை மதிக்காவிட்டாலும் பரவாயில்லை என்றும், ஆனால் மாண்புமிகு உயர்நீதிமன்ற வழிகாட்டுதலை பின்பற்றி விதி முறைகளை முற்றிலும் மீறி பார்க்கிங் வசதி இல்லாமல் செயல்படும் அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை சீல் வைக்குமாறு கேட்டிருந்தேன். மேலும் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார்மனு தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை தலைமை செயலாளர் கூறி உள்ளபடி கடைப்பிடிக்குமாறு கூறியதோடு இது சம்மந்தமாக தலைமை செயலாளர் நாளிதழில் வெளியிட்ட அறிக்கையின் நகலையும் இணைத்து நடவடிக்கை எடுக்குமாறு நான் ஆணையருக்கு அனுப்பிய புகாரிலியே குறிப்பிட்டிருந்தேன்.

எனவே இதிலிருந்தே துறையூர் நகராட்சி ஆணையர் அவர்கள் தனது உயர் அதிகாரிகளின் உத்தரவையும் மதிப்பதில்லை, தலைமை செயலாளர் உத்தரவையும் மதிப்பதில்லை, மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவையும் மதிப்பதில்லை என்பது தெள்ள தெளிவாக தெரிகின்றது. ஏனென்றால் ஆணையர் அவர்கள் உயர் அதிகாரிகள், தலைமை செயலாளர், மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவு அனைத்தையும் மதித்து நடப்பவராக

இருந்திருந்தால் விதிமீறிய அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை பூட்டி சீல் வைத்து தடை செய்திருப்பார்.

மாண்புமிகு உயர்நீதிமன்றம் மட்டும் தான் ஏழைகளுக்கு நீதி வழங்கி தமிழ்நாட்டு மக்களை காப்பாற்றும் கடவுளாக திகழ்கின்றது. எனவே மாண்புமிகு தாங்களும் நீதிபதி அந்தஸ்தில் உள்ளதால் மாண்புமிகு உயர்நீதிமன்றம் போன்று சத்தியத்தின் வழியில் நேர்மையாக செயல்படும் மதிப்புக்கு மேலான தாங்கள் தவறு செய்த நகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுத்து, விதிமுறைகளை முற்றிலும் மீறி செயல்படும் அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை பூட்டி சீல் வைத்து தடை செய்யுமாறு பொதுநலன் கருதி பணிவோடு, கீழ்படிந்து, தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் துறையூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.4796/2024/எப்1, நாள்.04.04.2025ல் மனுதாரரின்குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் -

"விசாரணையில் மேற்படி அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடம் சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. தரைத்தளத்தில் (RCC) 2106 சதுரடி பரப்பளவிலும், முதல் தளத்தில் (RCC) 2619 சதுரடி பரப்பளவிலும், இரண்டாம் தளத்தில் (AC சீட்) 2619 சதுரடி பரப்பளவிலும் கட்டிடம் உள்ளது. தரைத்தளத்தில் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி இயங்கி வருகிறது. முதல் தளத்தில் பைனான்ஸ் கம்பெனியும், இரண்டாம் தளத்தில் செட்டும் அமைந்துள்ளது.

இரண்டாம் தளத்தில் 438.0 சதுரடி பரப்பளவில் இரண்டு கடைகள் கட்டுவதற்கு இவ்வலுவலகத்திலிருந்து க.வி.எண்.108/2011, க.உ.எண்.112/2011 நாள் 16.12.2011-ல் திரு.வ.செந்தில் ரெட்டி என்பவருக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதர அனுமதி விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. தற்போது மேற்படி வளாகத்தில் எவ்வித கட்டுமானப்பணியும் மேற்கொள்ளப்படவில்லை. கட்டிடத்திற்கான சொத்து வரியானது வரிவிதிப்பு எண்கள்.087/024/900625, 087/024/900626, 087/0245/900634, 087/024/900397 மற்றும் 087/024/900398 ஆகிய வரிவிதிப்புகளில் செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு இல்லை.

வளாக உரிமையாளர் திரு.வ.செந்தில் ரெட்டி தனது மனுவில் திருச்சி ரோட்டில் T.S.No.21/2-ல் உள்ள 3000 சதுரடி இடம் 07.07.2010ம் தேதியில் திருமதி.சுனிதா காந்தி என்பவரிடமிருந்து கிரையம் பெற்று அதன்பின் நகராட்சி அனுமதி பெற்று கட்டிடம் கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். கடிதத்தின் க.வி.எண்.108/2011 நாள் 16.12.2011-ம் தேதிய அனுமதி வரைபடம் மற்றும் அனுமதி ஆணை இவைகளை மட்டும் இணைத்துள்ளார்.

இந்த வளாகம் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான திருச்சி சாலையில் அமைந்துள்ளது. சாலையில் ஏதேனும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து வட்டாட்சியரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்கிறேன்". எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2-ம் எதிர்மனுதாரரான அனுமிதா காம்ப்ளக்ஸ் உரிமையாளர் ஆகியோரை 28.04.2025 அன்று

நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.S.அன்பழகன் 28.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில் –

“திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் 10000 சதுர அடியில் உள்ள அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடமானது விதிமீறி கட்டப்பட்டதாக புகார் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் நகராட்சி ஆணையரால் எடுக்கப்படவில்லை.

அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து கட்டிடத்தை சுற்றியும் இடம் ஏதும் விடாமலும் கட்டியதோடு, மேற்படி கட்டிடத்தின் தரை தளத்தில் சுமார் 4000 சதுர அடியில் TMB பாங்க், TMB ATM மும், அந்த கட்டிடத்தில் சுமார் 3000 அடியில் ப்ரோஸ்டைல் துணிக்கடை, ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனமும் சுமார் 3000 சதுர அடியில் ஸ்ரீ வேலவா இன்ஸ்டிடூசன் நர்சிங் கேட்டரிங் ஹோட்டல் மேனேஸ்மென்ட் நிறுவனமும் செயல்பட்டு வருகிறது. தினசரி நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வங்கிக்கு வருவதோடு, ஸ்ரீராம் பைனான்ஸ்க்கும் தினசரி நூற்றுக்கும் அதிகமானவர்கள் வருவதால், பொதுமக்களின் வாகனம் நிறுத்துவதற்கு என்று ஒரு அங்குலம் கூட இட வசதி ஏற்படுத்தாமல், பார்க்கிங் வசதியுடன், Side set back–ற்கான இட வசதியும் செய்யப்படாமல் விதி மீறி செயல்படும் அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை பூட்டி சீல் வைத்து தடை செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

6. துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் 28.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்கள். அதில் –

“திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் 7344.0 சதுர அடியில் உள்ள அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடமானது 13 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடமாகும். தரைதளத்தில், RCC 2106 சதுர அடி பரப்பளவிலும், முதல் தளத்தில் RCC 2619 சதுர அடி பரப்பளவிலும், இரண்டாம் தளத்தில் AC சீட் 2619 சதுர அடி பரப்பளவிலும் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் தரைதளத்தில் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியும், முதல் தளத்தில் ஸ்ரீராம் பைனான்ஸ் கம்பெனியும் செயல்பட்டு வருகிறது. மேலும் இரண்டாம் தளத்தில் செட்டும் அமைந்துள்ளது.

இரண்டாம் தளத்தில் 438.0 சதுர அடி பரப்பளவில் இரண்டு கடைகள் கட்டுவதற்கு நகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிடத்தினை விதி மீறல்கள் மீது மேல் நடவடிக்கை எடுத்து உரிய அறிக்கை சமர்ப்பிக்க 3 வார கால அவகாசம் வழங்கிட மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளனர்.

7. இரண்டாம் எதிர்மனுதாரரான அனுமிதா காம்ப்ளக்ஸ் உரிமையாளர் திரு. K.V.செந்தில் ரெட்டி என்பவர் 28.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார். அதில் –

“திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் 4686 சதுர அடியில் உள்ள அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடமானது 13 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடமாகும்.

மேற்படி வளாகம் திருமதி.சுனிதாகாந்தி என்பவரிடமிருந்து 07.07.2010ம் தேதி அன்று கிரையம் பெற்று அதன் பின் நகராட்சி அனுமதி பெற்று கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி

கட்டிடத்திற்கு சொத்து வரி முறையாக செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் இணைப்பு பெறப்படவில்லை. 13 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ள நிலையில் தற்போது எவ்வித கட்டுமானப்பணியும் மேற்கொள்ளப்படவில்லை. இக்கட்டிடமானது கட்டிட விதிகளின்படி கட்டப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவர் முன்னிலையில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. துறையூர் நகராட்சி ஆணையர் 28.04.2025–ல் நடைபெற்ற விசாரணையின்போது அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு தனது அறிக்கையை துறையூர் நகராட்சி கடிதம் ந.க.எண்.4796/2024/எப்1 நாள்.14.05.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அதில் –

"நகரமைப்பு ஆய்வாளரின் விசாரணை அறிக்கையின்படி சர்வே எண்.235/5, கதவு எண்கள்.85/9A, 85/9A1, 85/9A2, 85/9A3 & 85/9A4 திருச்சி சாலையில் இயங்கி வரும் அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடம் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டிடம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் கட்டிடம் கட்டியுள்ளதற்கு கட்டிட அனுமதி பெறப்பட்ட விவரம் எதுவும் மனுதாரரால் இணைக்கப்படவில்லை. நகராட்சி அலுவலகத்திலும் ஆவணம் இல்லை.

இரண்டாம் தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு க.வி.எண்.108/2011 (க.உ.எண்.112/2011) நாள் 16.12.2011–ல் 438.0 சதுர அடி பரப்பளவில் கடை கட்டுவதற்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தரைத்தளத்தில் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி இயங்கி வருகிறது. முதல் தளத்தில் பைனான்ஸ் கம்பெனியும் செயல்பட்டு வருகிறது. இரண்டாம் தளத்தில் செட் அமைக்கப்பட்டுள்ளது.

தரைத்தளம், முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் தளத்தில் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135(1)ன் கீழ் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது.

தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள வணிக உபயோக கட்டுமானத்திற்கு வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி வாகனம் நிறுத்துமிடம் வசதிக்காக 1181.00 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மனுதாரரரால் வாகனம் நிறுத்துவதற்கென இடம் எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மேற்படி வணிக வளாகத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக எவ்வித புதிய கட்டிடப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. வரிவிதிப்பு எண்கள்.087/024/00874, 087/024/00875, 087/024/00888, 087/024/00401 மற்றும் 087/024/00402 ஆகிய வரிவிதிப்பு எண்களில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு ஏதுமில்லை. அனுமதியற்ற மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டுமானத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) கீழ் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி ஆணையரின் வாக்குமூலம், இரண்டாம் எதிர்மனுதாரரான அனுமிதா காம்ப்ளக்ஸ் உரிமையாளர் திரு.K.V.செந்தில் ரெட்டியின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் 10000 சதுர அடியில் உள்ள அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடமானது விதி மீறி கட்டப்பட்டதாக புகார் கொடுத்தும், எந்தவித நடவடிக்கையும் நகராட்சி ஆணையரால் எடுக்கப்படவில்லை என்றும், அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து, கட்டிடத்தை சுற்றி இடம் ஏதும் விடாமலும் கட்டியதோடு, மேற்படி கட்டிடத்தின் தரைத் தளத்தில் சுமார் 4000 சதுர அடியில் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மற்றும் ATMமும், சுமார் 3000 அடியில் ப்ரோஸ்டைல் துணிக்கடையும், ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனமும், சுமார் 3000 சதுர அடியில் ஸ்ரீவேலவா இன்ஸ்டிடுசன்ஆப் நர்சிங் மற்றும் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் நிறுவனமும் செயல்பட்டு வருகிறது எனவும், மேற்படி நிறுவனங்களுக்கு தினசரி நூற்றுக்கும் அதிகமானவர்கள் வருவதால், பொதுமக்களின் வாகனம் நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி ஏற்படுத்தாமல், பக்கத் திறவிடங்கள் விடாமல் விதி மீறி கட்டப்பட்டிருக்கும் அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடத்தை பூட்டி சீல் வைத்து தடை செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் கோரியுள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் 7344.0 சதுர அடியில் உள்ள அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடமானது 13 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடமாகும் என்பதும், தரைதளம் RCC 2106 சதுர அடி பரப்பளவிலும், முதல் தளம் RCC 2619 சதுர அடி பரப்பளவிலும், இரண்டாம் தளம் AC சீட் 2619 சதுர அடி பரப்பளவிலும் கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கட்டிடத்தின் தரைதளத்தில் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியும், முதல் தளத்தில் ஸ்ரீராம் பைனான்ஸ் கம்பெனியும் செயல்பட்டு வருவதும், இரண்டாம் தளத்தில் செட் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், இரண்டாம் தளத்தில் 438.0 சதுர அடி பரப்பளவில் இரண்டு கடைகள் கட்டுவதற்கு மட்டும், நகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

தரைத்தளம், முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 133, 135(1)ன் கீழ் அறிவிப்பு நகராட்சியால் சார்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், இரண்டாம் தளத்தில் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 135(1)ன் கீழ் அறிவிப்பு நகராட்சியால் சார்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி சொத்திற்கு வரிவிதிப்பு எண்கள் 087/024/00874, 087/024/00875, 087/024/00888, 087/024/00401 மற்றும் 087/024/00402 ஆகிய வரிவிதிப்பு எண்களில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருவதும், அனுமதியற்ற மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டுமானத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன் கீழ் உரிய நடவடிக்கைகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருவதும் துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மேலும், 2ஆம் எதிர்மனுதாரரான திரு.வ.செந்தில் ரெட்டி என்பவரின் வாக்கு மூலத்திலிருந்து திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் 4686 சதுர அடியில் உள்ள அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடமானது 13 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடமாகும் என்பதும், மேற்படி வளாகம் திருமதி.சுனிதாகாந்தி என்பவரிடமிருந்து 07.07.2010ம் தேதி அன்று கிரையம் பெற்று அதன் பின் நகராட்சி அனுமதி பெற்று கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கட்டிடத்திற்கு சொத்து வரி முறையாக செலுத்தப்பட்டு வருவதும், குடிநீர் இணைப்பு பெறப்படவில்லை என்பதும், 13 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ள நிலையில் தற்போது எவ்வித கட்டுமானப்பணியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும், இக்கட்டிடமானது கட்டிட விதிகளின்படி கட்டப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

இந்நிலையில் துறையூர் திருச்சி சாலையில் இயங்கிவரும் அனுமிதா காம்ப்ளக்ஸ் கட்டிடம் குறித்து துறையூர் நகராட்சியால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 133, 135(1) பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை இதுபோன்ற ஒத்த நேர்வுகளில் மாண்பமை உயர்நீதிமன்றம் வழிகாட்டுதலின்படி தொடர

துறையூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் விதி மீறல்கள் மீது நடவடிக்கை எடுக்க தவறிய அலுவலர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

2025–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு.S.அன்பழகன்,
எண்.155, அசோக் நகர்,
முசிறி மெயின் ரோடு, துறையூர் அஞ்சல் & வட்டம்.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 010.
2. நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
3. திரு.K.V.செந்தில் ரெட்டி,
அனுமிதா காம்ப்ளக்ஸ் உரிமையாளர்
எண்.57, பெருமாள் கோவில் சன்னதி தெரு
துறையூர் – 621 010, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்:
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ.உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

செயலாளர்.